


தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி, மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர் பி. பழனியப்பன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற தர்மபுரி ஒருங்கிணைந்த மாவட்ட செயற்குழு கூட்டத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வரும் 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் தர்மபுரி மாவட்டத்திற்கு வருகை தரும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது, 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்கி பேசினார். கூட்டத்தில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ மணி, தொகுதி பார்வையாளர்கள், ஒருங்கிணைந்த மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர,பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.




விழுப்புரம் மாவட்டத்திற்கு வருகை புரிந்த செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனுக்கு விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விக்கிரவாண்டி சுங்கச்சாவடி அருகில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அதன் பிறகு வருகிற நவ 29 ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைக்கவிருக்கும் விழுப்புரம் ஜானகிபுரம் புறவழிச் சாலையில் அமைந்துள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி அவர்களின் மணிமண்டபம் மற்றும் இட ஒதுக்கீடு போராட்டத்தில் உயிர்நீத்த 21 தியாகிகளின் நினைவு மண்டபத்தையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி, விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், சட்டமன்ற உறுப்பினர்கள் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், அன்னியூர் அ.சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ் உள்ளிட்ட அரசுத் துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

# நாகையில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கடன் உதவி வழங்கினார்! என்.கௌதமன் – உ. மதிவாணன் பங்கேற்பு!

நாகை., நவ. 20 -

நாகையில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா. பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு 191 பயனாளிகளுக்கு ரூ.1.07 கோடி கடன்களை வழங்கினார்.

நாகை மாவட்டம் நாகையில் 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்றது. நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ் தலைமை தாங்கினார். நாகை மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன்; தாட்கோ தலைவர் திர உ.மதிவாணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜெ. முகம்மது ஷா நவாஸ், கீழ்வேளூர் .நாகைமாலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் நாகை மாவட்டப் பொறுப்பு அமைச்சர் பள்ளி கல்வித் துறை அமைச்சர் தஅன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு 191 பயனாளிகளுக்கு ரூ.01 கோடியே 07 இலட்சத்து 31 ஆயிரத்து 732 மதிப்பிலான கடனுதவிகளை வழங்கி பேசுகையில் நாகை மாவட்டத்தில் உள்ள கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி கிளைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் 1050 பயனாளிகளுக்கு ரூ.6 கோடியே 57 இலட்சம் மதிப்பில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நாகைமாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக 2023-2024 ஆம் ஆண்டில் 30 ஆயிரத்து 285 விவசாயிகளுக்கு ரூ.182 கோடியே 61 இலட்சம் பயிர்க்கடன் வழங்கப்பட்டது. நடப்பாண்டிற்கு 14.11.2024 தேதிவரை 21 ஆயிரத்து 531 விவசாயிகளுக்கு ரூ.131 கோடியே 84 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நாகைமாவட்டத்தில் 9 ஆயிரத்து 157 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களில் 2023-2024 ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 261 புதிய உறுப்பினர்களுக்கு ரூ.40 கோடியே 20 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டது. நடப்பாண்டில் 2 ஆயிரத்து 932 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு. அவர்களுக்கும் ரூ.15 கோடியே 91 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளன. நாகை மாவட்டத்தில் உள்ள ஆயிரத்து 918 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.15 கோடியே 45 இலட்சம் மதிப்பிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 18 ஆயிரத்து 146 மகளிர் உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர்.

நாகை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் காலியாக உள்ள 19 விற்பனையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் மூலம் 09.10.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏழை எளியோர் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் குடும்ப சுமையினை கருதி கூட்டுறவு நிறுவனங்களில் 5 சவரனுக்குட்பட்டு வைக்கப்பட்ட 13 இலட்சத்து 12 ஆயிரம் குடும்பங்களின் நகைக்கடன்கள் ரூ.5 ஆயிரத்து 13 கோடி தள்ளுபடி செய்து ஆணையிட்டார். அதன்படி நாகை மாவட்டத்தில் தமிழக அரசு அறிவித்த 5 சவரனுக்குட்பட்ட நகைக்கடன் தள்ளுபடியாக 18 ஆயிரத்து 382 நகைக்கடன்கள் ரூ.53 கோடியே 81 இலட்சத்திற்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 13 ஆயிரத்து 788 குடும்பங்கள் பலனடைந்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் உள்ள 1 இலட்சத்து 17 ஆயிரம் மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.2 ஆயிரத்து 755 கோடி தள்ளுபடி செய்ய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டதன் மூலம் 15 இலட்சத்து 88 ஆயிரம் மகளிர் உறுப்பினர்கள் பயன் அடைந்து உள்ளார்கள். அதன்படி நாகை மாவட்டத்தில் உள்ள ஆயிரத்து 918 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.15 கோடியே 45 இலட்சம் மதிப்பிலான கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 18 ஆயிரத்து 146 மகளிர் உறுப்பினர்கள் பயனடைந்துள்ளனர். நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயல்படும் 57 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக 2023 - 2024 ஆம் ஆண்டில் நாளது தேதி வரை 30 ஆயிரத்து 285 விவசாயிகளுக்கு ரூ.182 கோடியே 61 இலட்சம் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில்20 ஆயிரத்து 673 விவசாயிகளுக்கு ரூ.127 கோடியே 25 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. நாகை மாவட்டத்தில் ஆயிரத்து 157 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களில் 2023-2024 ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 261 புதிய உறுப்பினர்களுக்கு ரூ.40 கோடியே 20 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 2 ஆயிரத்து 932 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கும் ரூ.15 கோடியே 91 இலட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுற வுத் துறை மாற்றுத்திறனாளிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்குவதில் தொடர்ந்து 5 ஆண்டுகளாக இந்தியாவில் முதலிடம் வகித்து வருகிறது. நாகை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் மூலமாக மாற்றுத் திறனாளிகளுக்கு நடப்பாண்டில் 34 நபர்களுக்கு ரூ.34.00 இலட்சம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அனைத்து கூட்டுறவு நிறுவனங்களிலும் கணினிமயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத ன்படி, நாகை மாவட்டத்தில் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களிலும் கணிணி மயமாக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது.

நபார்டு வங்கி மூலம் 1 சதவீகித வட்டியில் பெறப்படும் கடன் உதவியை கொண்டு இலாபத்தில் இயங்கும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் பல் நோக்கு சேவை மையங்களாக மாற்றுவதற்கு கடந்த ஆண்டில் நாகை மாவட்டத்தில் 27 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ரூ3 கோடியே 06 இலட்சத்தில் வேளாண் உபகரணங்கள் வாங்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. மேலும், நடப்பாண்டில் 41 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ரூ.7 கோடியே 87 இலட்சத்தில் வேளாண் உபகரணங்கள் வாங்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு கடன் சங்கங்கள். பெரும் பலநோக்கு கூட்டுறவு கடன் சங்கங்கள் ஆகியவற்றில் பணிபுரிந்து ஓய்வு பெற்று உயிருடன் உள்ள பணியாளர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் திட்டம் தமிழகம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் 221 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதியம் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கியின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. நாகை மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நியாய விலைக்கடைகளில் காலியாக உள்ள விற்பனையாளர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் அறிவிப்பு வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த காலிப்பணியிடங்கள் அனைத்தும் 2025 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகைக்கு முன்பாக அவர்களுக்கு பணிநியமன ஆணைகள் வழங்கப்படும் இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.ராஜேந்திரன், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா. மீ. புகழேந்தி, எம்ஆர்.செந்தில்குமார்,நகரக் கழக நகர மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, ஒன்றிய கழக செயலாளர் உதயம் வே.முருகையன், மகா.குமார், ஆ. தாமஸ் ஆல்வாஎடிசன், சிக்கல் என்.ஆனந்த், செல்வ. செங்குட்டுவன், ஆர். டி.எஸ். சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் எல். எஸ்.ஈ. பழனியபப்பன், . எஸ்.பி.டி.சார்லஸ், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ் . மாவட்ட ஊராட்சி உறுப்பினர் வீ.சரபோஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மறைந்த மாவட்ட கழக செயலாளர் மனிதநேய பண்பாளர் பூண்டி கே.கலைச்செல்வம் அவர்களின் 17வது நினைவுதினத்தை முன்னிட்டு இரத்த தான முகாம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் சாருஸ்ரீ, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார், தாட்கோ தலைவர் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், பேரூர் செயலாளர் பூண்டி.கே. கலைவேந்தன் ஆகியோர் பங்கேற்று ஏழை எளியவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.மாநில, மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர்க்கழக நிர்வாகிகள், கழக தோழர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

### நாகை வருகை தரும்

# துணை முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

## நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

நாகை, நவ . 20 -

நாகை மாவட்டம் நாகை நகரக் கழக நிர்வாகிகள் வார்டு கழக செயலாளர்கள் பிரதிநிதிகள் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது கூட்டத்திற்கு நாகை நகர கழக அவைத்தலைவர் இரா. முருகையன் தலைமை தாங்கினார்..நாகை நகர கழக செயலாளர் நகர் மன்ற தலைவர் இரா மாரிமுத்து வரவேற்றார்.

மாவட்டக் கழக பொருளாளரும் மாவட்ட கழகப் பிரதிநிதி மு. லோகநாதன், மாவட்ட கழகப் பிரதிநிதி ஆர்.ரமணி, நகர துணை செயலாளர்கள் பி.திலகர், சித்ரா குலோத்து ங்கன், பொருளாளர் அபூபக்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கூட்டத்தில் நாகை மாவட்ட கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் சிறப்புரை யாற்றினார்.

கூட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.ஆர். குலோத்துங்கன். மாவட்ட சார் பணி துணை அமைப்பாளர்கள் கலையரசன், பிரதீப், அன்புசெழியன் மற்றும் வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.முடிவில் நகரக் கழக துணை செயலாளர் வெற்றிலைக் கடை சிவா நன்றி கூறினார். கூட்டத்தில் வரும் 24 .11 .2024 நாகை வருகை தரும் தமிழ்நாடுதுணைமுதலமைச்சர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு நாகை நகர திமுக சார்பில் நாகை கோட்டவாசல்படியில் இருந்து நாகை வெளிப்பாளையம் அவுரி திடல் வரை வழி நெடுங்கிலும் ஆயிரக்கணக்கானோர் நின்று மேளதாளத்துடன் சிறப்பான வரவேற்பு அளிப்பது என்றும் வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடுகளை நகரக் கழக நிர்வாகிகள் வார்டு கழக செயலாளர்கள் நிர்வாகிகள் சிறப்பாக செய்து விடுவது என்றும், வரும் 27 ஆம் தேதி பிறந்தநாள் காணும் தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு பிறந்தநாளை முன்னிட்டு அனைத்து நாடுகளையும் கழக கொடி ஏற்றி இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகளை வழங்கிசிறப்பாக கொண்டாடிடுவது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட உளுந்தூர்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் பெயர் சேர்த்தல் சிறப்பு முகாமை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. மற்றும் வடக்கு மாவட்ட கழக அமைத்த தலைவர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர், இந்த ஆய்வின்போது நகர மன்ற தலைவர் திருநாவுக்கரசு, துணைத்தலைவர் வைத்தியநாதன், ஒன்றிய சேர்மன் ராஜவேல், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்கள் டேனியல் ராஜ், வசந்தவேல், பொதுக் குழு உறுப்பினர் செல்லையா, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் அருண் ராஜ்,துணை அமைப்பாளர் பாண்டியன் உள்ளிட்ட நகர மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், வாக்குச்சாவடி பாக நிலை முகவர்கள்,பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எவரெஸ்ட் மு. கணேசன்

### நவம்பர் 20 (2011)



பள்ளி பருவத்திலேயே இந்தி திணிப்பை எதிர்த்து போராட்டத்தில் கலந்து கொண்டவர்.

தி.மு.க. இளைஞர் அணி துவங்கிய நாளிலிருந்து இளைஞர் அணியின் வளச்சிக்கு பணியாற்றிய அவர், ஈரோடு மாவட்டத்தின் முதல் இளைஞர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதோடு, தொடர்ந்து மூன்று முறை அப்பொறுப்பை வகித்தவர்.

தி.மு.க. இளைஞர் அணி மாநில துணைச் செயலாளராகவும் பணியாற்றியவர். 1989ஆம் ஆண்டு கழக அரசின் சாதனை விளக்க இளைஞர் அணி பேரணியில் சிறப்பாக பணியாற்றியமைக்காக தலைவர் கலைஞர் அவர்களிடம் விருது பெற்றார்.


ஈரோடு மாவட்டத்தில் அனைத்து ஒன்றியங்களிலும் இளைஞர் அணி கிளையை அமைத்தவர். கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கவிஞர் பொன்னிவளவன்

### நவம்பர் 20 (1998)



தி.மு.க. இலக்கிய அணியின் தலைவராக பணியாற்றியவர்.

"கவியரங்குகள் பலவற்றில் பொன்னிவளவன் பாடிய கவிதைகள் எப்போதும் தன்மானத் தமிழர்களின் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். சாகாத கவிஞர்களின் வரிசையிலே இணைந்துவிட்ட அந்த உடன்பிறப்பை கழகமும், கழகக் கண்மணிகளும் என்றும் மறந்திட இயலாது" என தலைவர் கலைஞரால் புகழந்துரைக்கப்பட்டவர்.

தூத்துக்குடி நீதிமன்றத்தில் சட்ட எரிப்பு வழக்கில் நீதிபதி முன்னர் கவிதை வாக்குமூலம் தந்து கடுங்காவல் தண்டனை பெற்றவர்.

நெருக்கடி காலத்தில் ஓராண்டு சிறைவாசம் இருந்தவர்.

தலைமைக் கழகச் சார்பில் "கலைஞர் விருது" பெற்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**